திரு. எஸ். டி. உகம் சந்த்: அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக் கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 3, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

Thiru S. D. Ugamchand: Sir I move—

''In clause 3, for the words 'eleven years' substitute the words 'ten years and three months'.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 1/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

12-35 மணி.

நான் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவு ஒட்டுமொத்தமாக உறுப்பினர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஒன்று என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே இதிலே விவாதங்களோ, விமர்சனங்களோ தேவையியிராது. அப்படியே ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். என்றாலும் ஜனநாயகத்தின் உயர் அம்சம் என்பது விவாதங்களும் விமர்சனங்களும்தான். முடிந்தவர்கள் பேசலாம். பிறகு பதில் சொல்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகையாளர்கள் நிவாரணச் சட்டத்தை வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருப்பதை, காலத்தை நீட்டி இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கிறேன். அத்தோடு இந்த குத்தகைச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற அந்தக் குத்தகை கட்டக்கூடிய காலக்கெடுவில், அதாவது 1991 மார்ச் 31-ஆம் தேதிக்குள் நான்கில்

---

*1991ஆம் வருடம் சனவரி மாதம் 21ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1991 சனவரி 24] [திரு. வே. தம்புசாமி]

ஒரு பங்கு கட்ட வேண்டுமென்று இருப்பதை இரண்டு தவணைகளாகக் கட்டுவதற்குச் சட்டத்திலே அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நான்கில் ஒரு பங்கை இரண்டு தவணைகளாகக் கட்டுவதற்கு இந்த ஆண்டு பசலி முடிகிற காலம் வரையிலும் கட்டுகிற முறையில் கால அவகாசத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், குத்தகை விவசாயிகளின் குத்தகை பாக்கியை நிர்ணயிக்கிறபோது, குத்தகை பாக்கி என்பதை 75 : 25 என்ற வார அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும். இப்போது பாக்கி என்பது அவர்கள் குத்தகை பத்திரத்தில் முன்னாலே கண்ட பாக்கியைத்தான் பாக்கி என்று கூறுவதால் இப்படிப்பட்ட நிவாரணம் அளிக்கும்போது, குத்தகைக்கும் 75 சதவிகித வாரத்திற்கும் சம்பந்தம் இல்லாத சூழ்நிலை இருப்பதைக் கவனத்திலே கொண்டு, அந்த அடிப்படையிலே 75 : 25 என்ற வாரத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குத்தகை விவசாயிகள் பயிரிடுகின்ற அந்த நிலம், சாகுபடி செய்யக்கூடிய நிலம் பதியாமல் விடுகிற சூழ்நிலை இருக்கிறது. முன்னாலே அப்படிப்பட்ட குத்தகை நிலங்களைப் பதிவதற்காக குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவை மீண்டும் செயல்பட வைப்பதற்கான நடைமுறையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்யும் போது அந்த நிலைமையை கிராமத்திலே உள்ள வி.ஓ. பதிவு செய்யாத நிலைமை நீடிக்கிறது. இதற்குப் பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். ஆகவே அப்படிச் சாகுபடி செய்யக்கூடிய அந்தக் குத்தகைதாரர்களை கிராமத்தில் இருக்கிற கிராம அதிகாரிகள், அவர்கள் சாகுபடி உரிமையைப் பாதுகாக்கின்ற வகையில் சாகுபடி உரிமையைப் பதிவு செய்ய வேண்டும்; அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி பதிவு செய்யாது இருக்கிற காரணத்தினாலே அவர்கள் இன்று அரசால் வழங்கக் கூடிய பல்வேறு சலுகைகளைப் பெற முடியாத சூழ்நிலை இருப்பதோடு, கூட்டுறவு வங்கியிலே கூட அவர்கள் தங்களுடைய சாகுபடி உரிமையைப் பதிவு செய்து கடன் பெற முடியாத நிலைமையும் இருக்கிறது. இத்தகைய திருத்தங்களோடு இந்தச் சட்டத்தை அரசு பரிசீலித்து, நான் சொல்லி இருக்கக் கூடிய கருத்துக்களைப் பரிசீலித்து, நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

12-40 மணி.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கின்ற நேரத்தில் ஒருசில கருத்துகளை